**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108511

1. District மாவட்டம்: Coimbatore PS: காவல்நிலையம்: V&AC Year: ஆண்டு: 2021 FIR No.: மு.த.அ. எண்: 18/2021/AC/CB Date: நாள்: 24.8.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.8.2021 Date to : நாள் வரை 21.8.2021
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30hrs Time to : நேரம் வரை 11.45hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.8.2021 Time : நேரம் 11.30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.8.2021 Time : நேரம் 11.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed (computer Print)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 kms, East
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o. Village Administrative officer Vellanaipatti village, Sarkar samakulam Firka, Annur Taluk, Coimbatore.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C. Balraj
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Chithambaram Nadar
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42/2021
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Daily Wage
(g) Address : முகவரி D.No.9/2, Govindhanaickenpalayam North street, Idikarai post, Annur Taluk, Coimbatore District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
TR. kumar, Village Administrative officer, Vellanaipatti village, Sarkar samakulam Firka, Annur Taluk, Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் தொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 24/8/21

Signature of the Officer In-charge, Police Station [signature] 24/8/2021
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.8.2021 @ AN

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police
V&AC, Coimbatore
24.8.2021.

சமர்ப்பிக்கப்படுகிறது:

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 18/2021/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.**

24.08.2021-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபொழுது கோவை மாவட்டம், அன்னூர் தாலுக்கா, இடிகரை, கோவிந்தநாயக்கன்பாளையம் வடக்கு வீதியில் கதவு எண். 9/2-ல் குடியிருக்கும் சிதம்பரம் நாடார் என்பவரது மகன் C.பால்ராஜ் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில், கோவை மாவட்டம் சர்கார் சாமக்குளம் உள்வட்டத்தை சார்ந்த வெள்ளானைப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.K.குமார் என்பவர் வாதியின் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரைத்து அந்த வேலையை முடித்துக்கொடுப்பதற்கு லஞ்சமாக பணம் கேட்டது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு எவ்வித முன்விரோதமும் இல்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 24.08.2021-ம் தேதி 12.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.18/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரியான, கோவை மாவட்டம், சர்கார் சாமக்குளம் உள்வட்டத்தை சார்ந்த வெள்ளானைப்பட்டி கிராம நிர்வாக அலுவலர்

திரு.K.குமார் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர்: C.பால்ராஜ், வயது-42, த/பெ.சிதம்பரம் நாடார், கதவு எண். 9/2, கோவிந்தநாயக்கன்பாளையம் வடக்கு வீதி, இடிகரை அஞ்சல், அன்னூர் தாலுக்கா, கோவை மாவட்டம், பெறுநர்: உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கவுண்டம்பாளையம், கோவை மாவட்டம், ஐயா/அம்மா, நான் மேலே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் சாயிபாபா காலனியில் உள்ள அண்ணா காய்கறி மார்க்கெட்டில் உள்ள ஒரு காய்கறிகடையில் கடந்த 15 வருடங்களாக தினகூலியாக வேலை செய்துவருகிறேன். எனது மனைவி சாவித்திரி எங்க வீட்டிலேயே சிறிய அளவில் மளிகைக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். நான் கடந்த 17.5.2019-ம் தேதி கோவை மாவட்டம், அன்னூர் தாலுக்காவிலுள்ள வெள்ளானைப்பட்டி கிராமத்தில் சர்வே எண் 694/2-லுள்ள ஸ்ரீ விஷ்ணு அவின்யூ-II-ல் சைட் எண். 660-ல் 1337½ சதுரடியுள்ள காலி மனையிடத்தினை, கவுண்டம்பாளையத்தை சேர்ந்த திரு.சம்பத்குமார் என்பவரிடம் கிரையம் பெற்று விலைக்கு வாங்கினேன். அக்கிரையமானது கணபதி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3377/2019-ஆக பதிவு செய்யப்பட்டது. பின்னர் மேலே சொன்ன காலி மனை இடத்தின் பட்டாவினை எனது பெயருக்கு மாற்றவேண்டி நான் ஏற்கனவே இ-சேவை மூலம் மனுதாக்கல் செய்திருந்தேன். ஆனால் கொரோனா பிரச்சனை காரணமாக என்னால் வெள்ளானைப்பட்டி VAO அலுவலகம் செல்ல முடியவில்லை. மேலும் மேற்படி பட்டா பெயர் மாறுதலுக்கான எனது மனு, காலதாமதமானதால் கேன்சலாகிவிட்டது. அதனால் மீண்டும் 13.8.2021-ம் தேதி உரிய ஆவணங்களை இணைத்து இ-சேவை மூலம் மீண்டும் மனுதாக்கல் செய்து அதற்கான ஒப்புகைச்சீட்டினை பெற்றேன். மேற்படி ஒப்புகைச்சீட்டின் CAN ID.No. 0332908077113 மற்றும் பட்டா மாறுதல் மனு எண்.2021/0103/12/310514 ஆகும். அதன் பின்னர் நான் 18.8.2021-ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் வெள்ளானைபட்டியில் உள்ள VAO அலுவலகத்திற்கு சென்று பின்னிட்டு பெயர் விபரம் கேட்டுத்தெரிந்து கொண்ட வெள்ளானைபட்டி VAO திரு.குமார் என்பவரை சந்தித்து மேலே குறிப்பிட்டுள்ள எனது காலி மனையிட சொத்தின் பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் என்னைப்பற்றி விசாரித்துவிட்டு, இ-சேவை மையத்தில் பதிவுசெய்து ஒப்புகைச்சீட்டு வாங்கிவிட்டீர்களா என்று கேட்டார். உடனே நான் என்னிடம் இருந்த

ஒப்புகைச்சீட்டையும், பட்டா பெயர் மாற்றம் செய்யவேண்டிய அசல் சொத்து பத்திரத்தையும் கொடுத்தேன். அதை வாங்கி பார்த்துவிட்டு சொத்து பத்திரம், சிட்டா மற்றும் மூலப்பத்திரம் ஆகியவற்றை Xerox எடுத்துகொண்டு அவரை வந்து பார்க்குமாறு சொன்னார். நான் மேற்சொன்ன ஆவணங்களின் Xerox-ஐ எடுத்துகொண்டு வெள்ளானைப்பட்டி VAO திரு.குமார் அவர்களை மீண்டும் சுமார் 3.30 மணியளவில் சென்று பார்த்தேன். நான் கொடுத்த Xerox அனைத்தையும் வாங்கி பார்த்துவிட்டு VAO திரு.குமார் அவர்கள் பட்டா பெயர் மாறுதலுக்கு என்கிட்ட அப்ரூவல் வாங்கனும், அன்னூர் தாலுக்கா ஆபீசுல அப்ரூவல் வாங்கனும் அப்படி இப்படின்னு நெறைய அலையனும் என்றும், அதனால் என்னுடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கான எனது விண்ணப்பத்தை தாமதமின்றி பரிந்துரை செய்து அதற்கான வேலைகளைச்செய்து முடித்து கொடுப்பதற்கு அவருக்கு லஞ்சமாக பணம் ரூ.4,000/- கொடுக்க வேண்டும் என்றும் கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், கொஞ்சம் குறைச்சுக்குங்க சார் என்றும் கேட்டேன். அதற்கு அவர் சரி 3,500/- ரூபாய் ரெடிபண்ணிட்டு கூப்பிடுங்க என்று சொல்லி அவரது செல்போன் நெம்பர் 8675112215-ஐ என்னிடம் கொடுத்துவிட்டு, என்னுடைய செல்போன் நெம்பர் 8903826670-ஐ கேட்டு வாங்கிகொண்டார். பின்னர் 21.08.2021-ம் தேதி நான் மார்க்கெட்டில் வேலையாக இருந்தபோது காலை சுமார் 11.45 மணியளவில், VAO திரு.குமார் அவர்கள் 8675112215 என்ற செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் நெம்பர் 8903826670-க்கு கூப்பிட்டு, வெள்ளானைப்பட்டி VAO பேசுறேன் என்றும், தான் கேட்ட பணம் ரூ.3,500/-ஐ ரெடிபண்ணீட்டீங்களா என்றும் கேட்டார். நான் இன்னும் ரெடிபண்ணல சாருன்னு சொன்னேன். அதற்கு அவர் சரி ரெடி பண்ணிட்டு கூப்பிடுங்க என்று சொல்லிவிட்டு போனை கட்செய்துவிட்டார். நான் அவர் கேட்ட பணம் ரூ.3,500/- கொஞ்ச கொஞ்சமாக சேர்த்து ரெடி செய்துவிட்டு யோசித்து பார்த்ததில் லஞ்சம் கொடுத்து எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. எனவே பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமான எனது விண்ணப்பத்தை தாமதமின்றி பரிந்துரை செய்து அதற்கான வேலைகளை முடித்துகொடுக்க என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.3,500/-ஐ கேட்ட வெள்ளானைப்பட்டி VAO திரு.குமார் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd/-(xxxx) 24/08/2021 இடம்: கோவை நாள் : 24.08.2021 Sir, Received the complaint on 24.08.2021 at

about 11.30hrs sd/-(xxxx) 24/8/2021 (R.Ezhilarasi), Inspr. of Police, VAC, CBE. Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.18/2021/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 24.08.2021 at 12.15hrs sd/-(xxxx) 24/8/2021 (R.Ezhilarasi), Inspr. of Police, VAC, CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

24/8/2021

(R. எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.